தொகுதி 6] [பகுதி 12

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

விஷு—வருஷ பங்குனிமீ"

MARCH 1942

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


பக்கம்

1. தாய் மொழி கற்பித்தல் ... .... .... 381
—M. சுப்பிரமணியம்

2. ஆரம்பப் பள்ளிக்கூட பூகோளபாடம் .... .... 389
—J. ராமஸ்வாமி

3. பிள்ளைகளின் கையெழுத்து—3 .... .... 393
—R. மஹாதேவன் B.A., L.T.

4. கலையும் கைத்தொழிலும்—X .... .... 395
—R. M. Savur

5. ஆரம்பப் பாடசாலைப் பிரச்னைகள் .... ... 396
—S. T. ராமானுஜ அய்யங்கார்

6. துணி பை தைத்தல் .... .... .... 400
—ஸ்ரீமதி ஸீ. காந்தா

7. செய்தித் திரட்டு .... .... .... 402

8. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 409

# சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைக் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 மார்ச் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை—M. 1*, 2, 5, 20, 23, 24*, 36, 38, 47.

செங்கற்பட்டு—Ch. 1, 4, 17, 18, 37.

வட ஆற்காடு—N. A. 3, 4, 5, 6, 7, 8, 10, 12, 13, 23, 25, 40, 48, 50, 64.

தென்னாற்காடு—S. A. 9, 10, 12, 24, 30, 31, 77, 85, 87, 88, 89, 91.

தஞ்சாவூர்—Tan. 1, 3-A., 4, 5, 6*, 12, 15, 16, 17, 20, 22, 23, 44, 45, 47, 50, 60, 68, 69, 70, 71, 72, 88, 90.

திருச்சி—Tri. 3, 9, 12, 15, 22-A, 48, 53, 54, 55.

ராமனாதபுரம்—Rd. 1, 4, 5, 9, 12, 13, 23, 29, 53, 63.

மதுரை—Md. 3, 4, 5, 6, 9, 19, 26, 48.

திருநெல்வேலி—Tin. 2, 3, 5, 6, 13, 17, 19, 22, 23, 25, 39, 40, 43, 46, 47, 48, 67, 68, 70, 88, 89.

சேலம்—S. 1, 2, 3, 6, 10, 19, 23, 31, 33, 35, 65.

கோயமுத்தூர்—Co. 3, 4, 6, 7, 14, 17, 18, 23, 35, 36, 39, 40, 52, 59*.

திருவாங்கூர்—Tra. 1.

*நடப்பு வருஷசந்தா பாக்கியுடன் சேர்த்து அனுப்பவேண்டும்

**குறிப்பு** :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும், மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். **—பத்திராதிபர்.**

# நமது இந்தியா சரித்திரங்கள்




ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்கும்
ஒன்றும், இரண்டாம், மூன்றும் பாரங்களுக்கும்

**புதிய ஸிலபஸிற்கேற்ப**

வி. பூவராஹமூர்த்தி அவர்களால்
எழுதப்பட்டவை

★

முதல் புத்தகம் ... விலை அணா 9
(120 பக்கங்களும், 37 சித்திரங்களும் அடங்கியது)

இரண்டாம் புத்தகம் ... விலை அணா 11
(174 பக்கங்களும், 42 சித்திரங்களும் அடங்கியது)

மூன்றும் புத்தகம் ... விலை அணா 11
(138 பக்கங்களும், 42 சித்திரங்களும் அடங்கியது)

குறிப்பு: பார்க்க விரும்பினால் தலைமை உபாத்தியாயர்களுக்கு மாதிரிப் பிரதி அனுப்பப்படும்.

## ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்



மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | |
|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# பாலர் கல்வி

| தொகுதி 6 | 1942 ௵ மார்ச் ௴<br>விஷு ௵ பங்குனி ௴ | பகுதி 12 |
|---|---|---|


## தாய்மொழி கற்பித்தல்


M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*


### VIII. இலக்கியம்—அதன் விசேஷ லக்ஷணமும் ஆசிரியரின் நோக்கமும்

வாசக புஸ்தகங்களும்—இலக்கியமும்

சிறந்த புலவர்களால், உயர்ந்த லக்ஷியங்களைக் கைக்கொண்டு நன்றாக எழுதப்பட்ட வாசக புத்தகங்கள் மூலமாகவும், ஆசிரியர்களின் போதனா சக்தியாலும், சிறு மாணவர்கள் தங்கள் தாய்மொழியின் சிறப்பையும், தாய் நாட்டின் மேன்மையையும் ஒருவிதமாக தெரிந்துகொண்டிருக்கலாம். இப்புத்தகங்கள் பிள்ளைகளுடைய கருத்துக்களையும், அவற்றை வெளியிடுவதற்குத் தகுந்த சொற்களையும் ஒருவிதமாக உண்டாக்கியும் இருக்கலாம். இருப்பினும் மாணவர்களும் படிப்படியாக வளர்ந்துகொண்டே வருகின்றார்கள். அவர்களுடைய புத்தியும், யுக்தியும், உணர்ச்சியும், வளர்ந்துகொண்டே வருகின்றன. கதைகள், இயற்கை வருணனை, பாட்டு முதலியவற்றில் இயல்பாகவே மாணாக்கர்களுக்கு ஆசை இருப்பினும், அவர்களுடைய மனப்பான்மை வரவர வித்தியாசமடைந்து முதிர்ந்த நிலையை அடைகிறது. இந்தத் தருணத்தில் வெறும் வாசக புத்தகங்களில் இருக்கும் விருப்பம், மாறுதலுக்குட்படுகின்றது. மாபெரும் புலவர்கள் எழுதிய விஷயங்களை அப்படியே முதல் நூலில் படிக்க விரும்புகின்றார்கள். விசேஷ இலக்கிய நூற்களிலிருந்து அப்படியே பெயர்த்துத் தொகுக்கப்பட்ட இலக்கியத் திரட்டுகளைப் படிக்க ஆவல் கொள்கின்றார்கள். வாசகம் படிக்கும்போது, வாக்கிய அமைப்பு

சொற்களின் இலக்கணம், அவற்றின் நிலை, ஆகிய இவைபோன்றவற்றில் கருத்து வைத்த மனம், கொஞ்சம் முதிர்ச்சி அடைந்த காலத்தில், கதைகளின் தன்மை, நடை அமைப்பு, ஆக்கியோன் கருத்து, கற்பனை விசேஷம், விஷய அமைப்பு, பாடத்தின் பொதுக் கருத்து, சொற்களின் விசேஷப்பொருள், முதலிய உயர்ந்த விஷயங்களை கவனிக்க நாடுகிறது. சிறந்த புலவர்களுடைய கருத்து, கற்பனை, அனுபவம், உணர்வு முதலியவற்றோடு மாணாக்கனும் தன்னை இசைத்து அவர்களுடைய மனத்தோடு ஒத்திருக்கப் பார்க்கின்றான். இந்த மாதிரியான மனநிலை தருணத்தில்தான் தாய்மொழி இலக்கிய முதல் நூல்களையும் மாணவர்களுக்கு அதிகமாகத் தரவேண்டும்.

## எல்லோருக்கும் இலக்கியத்தில் விருப்பம் இருக்குமா

ஆனால் பொதுவாக எல்லா மாணவர்களுக்கும் இலக்கியம் கற்பதில் விருப்பம் இருக்குமா? மனோ தத்துவ சாஸ்திர உண்மை பிரகாரம் எல்லா மாணவர்களுக்கும் இலக்கியத்தில் ஒரு மனப்பான்மை [illegible] இருக்காது, ஏனென்றால் மாணவர்களின் மனோசக்தி வித்தியாசப்படுகிறது. சங்கீதம் கேட்பதில் எல்லோருக்கும் விருப்பம் இருக்கும். ஆயினும் அதை அப்பியசித்து அதில் வல்லோராக வேண்டும் என்பது ஒரு சிலருக்கேயாம். சிலருக்குக் கணிதத்திலும், வேறு சிலருக்குச் சரித்திரத்திலும், மற்றும் சில மாணவர்களுக்கு விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சியிலும், இன்னும் சிலருக்கு இயந்திர வித்தை சாஸ்திரத்திலும், விருப்பம் தனித்தனியே இருக்கலாம். தவிர கலையின் இலக்ஷணங்களையும், இலக்கியத்தின் மேன்மையையும் மாணவர்கள், நன்றாக அறிந்துகொள்ள ஒரு குறித்த மனோநிலைப் பருவத்தில் தான் முடியும். சுற்றுப்புற வாசனை, வீட்டு வசதி, பொது மக்களின் தேவை ஆகிய இவையும், இலக்கிய விருப்பத்திற்கு வசதி அளிக்கின்றன. இது நிற்க பொதுவாக எல்லா மாணாக்கர்களும் தற்போது தினசரி வாழ்க்கைக்குரிய விஷயங்களைக் கற்று அவற்றில் திறமையுள்ளவர்களாகி, சீவனோபாயத்திற்கு வேண்டிய வசதிகளைத் தேடிக்கொள்கின்றார்கள். இதனால் இலக்கியத்தில் விசேஷ பயிற்சி அடைய விரும்புகின்றதில்லை. இலக்கியத்தில் புலமை அடைந்தவனைக் காட்டிலும், கைத்தொழில், வாணிபம், இயந்திர சாஸ்திரப் பயிற்சி முதலியவற்றில் அறிவுடையவன் வெகு எளிதில் ஒரு உத்தியோகத்தைப் பெறக்கூடும். அன்றியும் இலக்கியப் பயிற்சிக்குச் சாதகமில்லாத வேறு பிற நிலைமைகளும் இருக்கின்றன.

## வேறு நிலைமைகள்

தாய்மொழி இலக்கியச் சுவையை முற்றிலும் மாணவர்களுக்கு ஊட்ட வசதியான நிலைமைகள் தற்போது நமது பள்ளிக்கூடங்களிலும் இல்லை. பள்ளிக்கூட வகுப்புக்களில் குறிக்கப்பட்ட காலத்திற்குள் அ

சாங்க பரீக்ஷயினிமித்தம் பல பாடங்களை பல ஆசிரியர்கள் பல முறைகள் பிரகாரம், பல மாணவர்களுக்குப் புகட்டவேண்டும். தாய்மொழிப் பாடம் கற்பிக்கப்படும் நேரமும் குறைவு. ஆங்கில மொழியைக் கற்பிக்கும் சில ஆசிரியர்களைப்போல தமிழ் மொழியை நவீன முறையில் சுவையூட்டும்படி உற்சாகத்தோடு கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்களும் மிகக் குறைவு. ஏனென்றால் இத்தகைய ஆசிரியர்களுக்கு ஆதரவும், செல்வாக்கும், பொது மதிப்பும், ஊதியமும் மிகக் குறைவாகவே இருக்கின்றன. தவிர, தமிழ் மொழியில் பள்ளிக்கூடத் தேவைக்குத் தகுந்த இலக்கிய வாசக புத்தகங்களும் பிறவும் குறைவாகவே இருக்கின்றன. குறைவை நிறைவாக்க பண்டிதர்களும், ஆசிரியர்களும், யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை. எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களும் மாணவர்களுடைய மனநிலை, ஆவல், வயதிற்குத் தகுந்த குணம் முதலியவற்றைத் தழுவி எழுதப்படவில்லை. பாலர்களுக்கு இன்பந் தரும் புத்தகங்களும், சற்று முதிர்ந்த மாணவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் புத்தகங்களும் பெரியோர்கள் மௌனமாகக் கற்று சந்தோஷப்படும் புத்தகங்களும் வெவ்வேறானவை. புத்தகம் எழுதுவோர்கள் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டும். மேலும் புத்தம் புதிய நூற்களும் நமது தமிழ்ப் பாஷையில் இல்லை. மாணவர்களுடைய மனோபாவத்திற்கும், அவர்கள் அறிந்து கொள்ளும் சக்திக்கும், தகுந்தாற்போல் செய்யுள் வகைகளும், கதை வகைகளும், வருணனைகளும் அதிகம் இல்லை. ஏராளமான வசன நடை புத்தகங்களும் பொது மக்களுக்கு உற்சாகம் தரும் நாவல்களும் மிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆசிரியர்களுடைய போதனா முறைகளும் இலக்கியச் சுவையை வளர்ப்பதற்குப் பதிலாக மொழிப் பயிற்சித் துறையை அதிகரிக்க அமைந்திருக்கின்றன. சில ஆசிரியர்கள் இலக்கியக் கனியை இலக்கண இயந்திர வாயிலிட்டு அழுத்தி அசக்கி ஆட்டி நசுக்கிச் சாரத்தைக் கீழே விட்டு திப்பியை ஊட்டுகின்றார்களே யொழிய தீங்கனியைத் தித்திப்பாகத் தின்று மாணவர்கள் இன்பமடைய அவர்களை விடுகிறதில்லை. எனவே, மனநிலை வித்தியாசம், ஜீவனத் தேவை, புத்தகம் அதிகமாக இல்லாத குறைவு, தமிழாசிரியர்களின் குறைவான ஊக்கம், பள்ளிக்கூட பாட திட்டம், மாணவர்களுடைய மனோபாவத்திற்குத் தகுந்தாற்போல் புது நூற்கள் இல்லாமை, இலேசில் படிக்கத் தகுந்த (**Light Literature**). இலக்கியக் குறைவு, சில ஆசிரியர்களின் தவறான முறைகள் முதலியனவும், தாய் நாட்டு இலக்கியச் சுவையை மாணவர்களுக்கு ஊட்டத் தடையாக இருக்கின்றன. நிற்க, இலக்கியமென்ன என்பதைப் பார்ப்போம்.

### இலக்கியமென்றால் என்ன ?

தாய்மொழியில் எழுதப்பட்டவை எல்லாம் இலக்கியமாகுமா ? இலக்கியத்திற்கும் வேறு நூற்களுக்கும் உள்ள வித்தியாசங்கள் யாவை ?

விஞ்ஞான சாஸ்திரம், சோதிடம், மருத்துவம், வைத்தியம், சிற்பம், சரித்திரம், சத்துவம் முதலிய நூற்கள் எல்லாம் மனிதனுக்கு உபகாரமாக இருப்பினும் சரியான முறைப்படி இலக்கியத்தில் சேரா. சிறப்பாக மனித வாழ்க்கையின் விரிவான அம்சங்களைக்குறித்து மனுஷத் தன்மையை எப்போதும் இலக்காகக்கொண்டு பெரும் புலவர்களால் ஒன்பது சுவைகளையொட்டி படிப்போர்க்கு இன்பம் அளிக்க வல்ல கலைத்தன்மையோடு எழுதப்பெற்றவைகளுக்கு இலக்கியம் என்று ஒருவாறு கூறலாம். கட்டுரைகள், நாவல்கள், சிறுகதைகள் பெருங்கதைகள், செய்யுட்கள், தொடர்கதைகள், காவியங்கள் முதலியனவும் இலக்கியத்தில் அடங்கும். சில சமய நூற்களாகிய, தேவாரம், திருவாசகம், ஆழ்வார்கள் இயற்றிய பிரபந்தம், ஆகிய இவையும் இலக்கியத்தில் சேரும். இன்னும், பரணி, உலா, கோவை, அந்தாதி, பரல், அம்மானை பிள்ளைத்தமிழ் முதலிய தொண்ணூற்றாறு வகைப்பிரபந்தங்களும், சங்கச் செய்யுட்களும், இலக்கண வகைகளாகிய தொல்காப்பியம் முதலியனவும் இலக்கியத்தில் அடங்கும். இவை எல்லாம் ஆக்கியோன் தன் உள்ளக் கனலிலிருந்து உதிக்கும் கருத்துக்களை, தன் உயர்ந்த மனோபாவப் பிரகாரம், கற்பனை யுதவியால் ஆக்கப்பட்டவை. ஒவ்வொரு சிறந்த புலவருடைய பௌருஷமும் (Personality) வாழ்க்கையைப்பற்றிய அபிப்பிராயமும் (View of life) சொந்த கற்பனையும் (Original Imagination) தான் இயற்றிய நூலில் எப்படியாகிலும் அடங்கி இருக்கும். ஒரு புலவர் ஒரு விஷயத்தை நோக்கும் விதமும், அதேவிஷயத்தை வேறுபுலவர் நோக்கும்மாதிரியும் வித்தியாசப்படுமானால் இலக்கியத்தின் நுண்மையும் சிறப்பும் வெளியாகின்றன. அன்றியும், இன்பம் தருவதற்குத் தகுந்தநடை, சொல் அழகு, விஷய அமைப்பு முதலியனவும் இலக்கியத்தின் விசேஷ லக்ஷணமாகும். கற்போர் மனதைக் கவர்ந்து அவர்களுடைய உள் உணர்ச்சிகளை எழுப்பி, அனுதாபம் முதலியவற்றைப் பெருக்கி, என்றும் இன்பக்கடலில் நாம் மூழ்கி இருக்கத் தகுந்த நடையே இலக்கியத்தின் பிரதான அம்சம். கிரியா சக்தியும் (Creative Power) கலை அழகும் (Artistic Beauty) நிலைபெற்ற இன்பமும் (Permanent Pleasure) மனிதனுக்குரிய தன்மையும் விசேஷ அனுதாபத்தை வளர்க்கும் பொருளும் பிறவும் இலக்கியத்தில் மண்டிக்கிடக்கும்.

### இலக்கியமும்—வாழ்க்கையும்

இலக்கிய வகைகள் எல்லாம் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டனவாகவே இருக்கும். மீன்பிடிக்கும் ஜாதியாரில் தோன்றிய புலவர் தம் இனத்தாரின் மேன்மை, குணம், வாழ்க்கை, ஒழுக்க விதிகள் முதலியனவற்றையே ஆதாரமாகக்கொண்டு இலக்கியம் செய்துள்ளார். இம்மாதிரியே ஒவ்வொரு நாட்டு இலக்கியமும் அந்தந்த நாட்டுமக்கள் இயல்பு, வாழ்க்கை, இவைகளை விசேஷமாகக் காட்டும். இந்தியமக்களின் விசேஷ

இயல்பு தெய்வ நம்பிக்கை. இதை ஒவ்வொரு இந்தியப் புலவர் இயற்றிய நூலிலும் காணலாம். மேலும் நாம் இலக்கியத்தைப் படிப்பதற்கு ஆசை உண்டாகும் பாகம் மனித வாழ்க்கை சம்பவங்களும், ஒப்பு, உயர்வு, தாழ்வு, இன்பம், துன்பம், நம்பிக்கை முதலிய உணர்ச்சிகளுமே யாகும். வாழ்க்கையில் நடந்தவற்றை இன்பமுண்டாக்கும்படி புலவரால் தன் கற்பனைத் திறமையைக்கொண்டு சொல்லப்படும் விஷயங்கள் எல்லாம் அழியாத உண்மைகளாகவே இருக்கின்றன. எனவே இலக்கியம் கற்பது மனித வாழ்க்கையை அறியப் புகுவதாகும்.

## இலக்கியத்திற்கு அடிப்படையான உள் உணர்ச்சிகள் (Impulses)

இலக்கியங்களின் வேர்கள் எல்லாம் மனிதவாழ்க்கை என்னும் நிலத்தில் பாய்ந்து அதன் சாராம்சங்களால் பலத்து வளர்கின்றன. இவற்றின் கனிகளும் உண்ண இனிமையாகவே இருக்கும். இதற்குக் காரணம் பெரும் புலவர்களுடைய விசேஷ நடையேயாகும். மனிதவாழ்க்கை சம்பவங்களைப்பற்றி உண்மையாக உணர்ந்து அவற்றைச் சொற்களின் மூலமாக வெளிப்படுத்தும்போது, அவை நம் உணர்ச்சியை தட்டி எழுப்புகின்றன. இத்தகைய நடை (Style) தெய்வப் புலமையுள்ள பெரும்புலவர்களுக்குத்தான் அமையும். எனவே (1) பெரும்புலவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும் நடைவன்மை. (2) மனிதர்களுடைய செய்கைகளிலும், அவர்களுடைய போதுவாழ்க்கையிலும் நமக்கு இருக்கும் ஒரு தனிவிருப்பம். (3) நாம்வாழும் இந்த உண்மையான உலகத்தில் உண்டாகும் பற்றோடு நம்மனத்தால் சிருஷ்டிக்கப்பட்ட கற்பனை உலகத்திலும் ஏற்படும் ஒரு பெருவிருப்பம். (4) ஒரு உருவத்தை நாடி அதனிடம் இயற்கையாகப் பிரேமைகோள்ளும் குணம் ஆகிய இவைகளே இலக்கியத்தின் உள் உணர்ச்சிகளாக இருக்கின்றன.

## இலக்கியத்துறை

பெரும்புலவர்கள் உள்ளத்தினின்று எழும் பேருணர்ச்சிகள் மாத்திரம் இலக்கியத்தின் விசேஷமல்ல. இவ்வுணர்ச்சிகளெல்லாம் ஒரு பொருளைப்பற்றியே இருக்கின்றன. மனித வாழ்க்கையே பரந்த பொருளாயும் சிந்தனைக்குரிய துறையாயும் இருக்கிறது. மனித வாழ்க்கையில் எவ்வளவோ ஏற்றத்தாழ்வுகளும், ஒற்றுமை வேற்றுமைகளும் இருக்கின்றன. இம்மாதிரியே இலக்கியத்திலும் உண்டு. காதல், பிறப்பு, இறப்பு, பாவம், புண்ணியம், போறுமை, அவா, வெகுளி முதலிய மனிதகுணங்களும் பொதுவாக எல்லோரிடத்திலும் காணப்படுகின்றன. சமூகவாழ்க்கையால் மனிதனுக்குப் பல பிரச்னைகளும் தோன்றுகின்றன. வெளி உலகத்தில் தோன்றி இருக்கும் இயற்கையும் மனிதனுக்குப் பலகருத்துக்களைத் தருகின்றன. இவையெல்லாம் பெரும்புலவர்களுக்குப் பொருள் தந்து

அவர்கள் கிரியாசக்தியைத் தூண்டி ஒரு அழகான கலை உருவமாகி நமக்கு இன்பம் தருகின்றன. இவையே இலக்கியத் துறையாகும்.

### இலக்கியத்தின் விசேஷசாரம் இன்பம்

கலைஞனால் எழுதப்பட்டவை எல்லாம் இன்பம் தருபனவாகவே இருக்கின்றன. கலைஞன் தன் கற்பனைசக்தியின் உதவியால் அழகான நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களை நாம் இன்ப உணர்ச்சியின் மூலமாகத்தான் அறியக்கூடும். மேலும், கலைஞனுடைய சமத்காரம், பேரறிவு, தயாள குணம், நம்பிக்கை, சமதிருஷ்டி, கற்பனைத்திறன், சொல் அழகு, பொருள் விசேஷம், உலக அனுபவம், ஆகிய இவையும் நமக்கு இன்பம் தருகின்றன. எனவே பொதுவாக இலக்கியத்தின் நோக்கம், அதன் தன்மை அதை ஆக்கியோனது கருத்து அது உண்டாவதற்கு அடிப்படையான பேருணர்ச்சிகள், அதன் துறை, அதன் முக்கிய சாராம்சமான இன்பமளிக்கும் குணம் ஆகிய இவைபோன்ற பல விஷயங்களை ஆசிரியர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டாலன்றி, தங்கள் மாணவர்களுக்கு இலக்கியச் சுவையை நன்றாக ஊட்ட முடியாது.

### இலக்கியச் சுவையை ஊட்டுவது எப்படி?

இலக்கியம் கற்பிப்பதற்கும் இதர பாடங்களைக் கற்பிப்பதற்கும் விசேஷ வித்தியாசங்கள் இருக்கின்றன. இலக்கியத்தின் பிரதான அம்சமாகிய இன்பம் ஊட்டும் தன்மையை ஆசிரியர்கள் மறந்துவிட்டால், தங்கள் நோக்கம் முற்றுப் பெறாது. கலைகளின் இன்பத்தை அடையவே மாணவர்களும் விரும்புகின்றார்கள். விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி, சரித்திரம், பௌதிக சாஸ்திரம், வான சாஸ்திரம், கணிதம், இயந்திர சக்தி சாஸ்திரம், பொருள் நூல் ஆராய்ச்சி முதலியனவெல்லாம் சில பிரதான உண்மைகளை விளக்குகின்றனவே யொழிய (**Exposition of Principles**) மனிதனுக்கு இன்பம் தரும் அம்சமும் மனுஷ தத்துவத்தைக் காட்டும் தன்மையும் அவற்றில் இல்லை. ஆகையால் இலக்கியத்தை உணர்ச்சியுடன் படித்துப் பார்க்கவேண்டும். நாடகங்களை நடிக்கவும், பாக்களை உரக்கப்படிக்கவும், பெரிய காப்பியங்களை இசையுடன் வாசிக்கவும், கட்டுரைகளையும் அழகிய கதைகளையும், வேண்டியபடி பொருள்பட வாசிக்கவும் மாணவர்கள் பழக்கப்படவேண்டும். அதிகமான இன்பம் ஊட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடே பழந்தமிழ்ப் புலவர்கள் எல்லோரும் செய்யுட்களை நிரம்பச் செய்தனர் போலும்.

### இலக்கியப் பரிபாஷை நிபுணர்கள்

இனி, எத்தகையோர் இலக்கியத்தை போதித்தால் மாணவர்கள் இன்பம் அடையக்கூடும்? இலக்கிய ஆராய்ச்சியில் சிறப்பு அடைந்தவர்

களும், இலக்கிய பரிபாஷையில் தேர்ந்த நிபுணர்களும், இலக்கியத்தைப் போதிப்பது நலமே என்றாலும், அவர்களுடைய முறை அவர்களையும் அறியாமல் மாணவர்களுக்குக் கசப்பை ஊட்டிவிடுகின்றன.' ஏனென்றால் அவர்கள் தங்களுடைய அபார அறிவினால், வரை கடந்து செல்கின்றார்கள். உடலை அறுத்து பரிசீலனம் பண்ணும் நிபுணர்கள் (**Anatomist**) போல அவர்கள் இலக்கியத்தைச் செய்கின்றார்கள். சங்கீதம், சிற்பம், ஓவியம், முதலிய கலைகள் எல்லாம் இலக்கியத்தைப்போல இன்பம் அளிக்க சக்தி வாய்ந்தன. இவை பரிபாஷை நிபுணர்களால் ஆராய்ச்சி நிலைமைக்குக் கொண்டு வரப்படுகின்றன. கற்பனை சக்தியே இல்லாத சிலர் தம் உழைப்பால் இலக்கியத்தை அச்சுவேறு ஆணி வேறாகப் பிரித்து, அதன் உள்நோக்கி, ஒரு முடிவான அபிப்பிராயத்திற்கு வரலாம். இந்த அபிப்பிராயம் சாரமற்றது. கதை சாரமும் (**Story-Interest**), மனித உற்சாகத்திற்குரிய தன்மையும் (**Human Interest**) கலை வனப்பும் (**Artistic Beauty**) கற்பனை ஓட்டமும் (**Imaginative flight**) சில பரிபாஷை நிபுணர்களுக்கு அதிக சாரம் தருவதில்லை. ஆகையால் இத்தகைய நிபுணர்கள் இலக்கியம் போதிக்கும்போது, மாணவர்களுடைய மனோதத்துவத்தைக் கவனிக்கவேண்டும். மிதமிஞ்சி போகக் கூடாது.

## பாலர்கள் இலக்கியம்

சிறுவர்களுடைய இலக்கியங்கள் கதை நிறைந்தனவாக இருக்க வேண்டும். இவர்களுக்குப் பிடிக்காதவற்றைப் போதிக்கும்போது, மாணவர்களுடைய சலிப்பு, வெறுப்பு, கவனமில்லாமை, ஆகிய இவற்றை வெகு சூக்ஷ்மமாக ஆசிரியர்கள் அறிந்துகொள்ளவேண்டும். விநோதக் கதைகள், கட்டுக் கதைகள், சரித்திர சம்பந்தமான கதைகள், வீரரசம் பொருந்திய சிறந்த வீரர் கதைகள். இராயர் அப்பாஜி கதைகள், புராணம், இலக்கியம், இதிகாசம், முதலியவற்றிலிருந்து பெயர்த்து எழுதப்பட்ட கதைகள், ஆகிய இவற்றைப் படிக்கச் செய்யவேண்டும். புராணக் கதைகளைச் சொல்லும்போது ஆசிரியர்களுடைய மதக் கோட்பாடுகள் ஒருபோதும் தடையாக இருக்கக்கூடாது. இம்மாதிரியே செய்யுட்களிலும், சதக நூற்கள், அம்மானை சிந்துகள், தில்லானுக்கள், பாரதியார் தேசிய கீதம், அவர் எழுதிய கதைச் செய்யுளாகிய பாஞ்சாலி சபதம், ஔவையார் இயற்றிய வாக்குண்டாம், நல்வழி, புகழேந்தியின் அழகான நளவெண்பா, முதலியன இன்பம் தரக்கூடும்.

## மூன்று முக்கிய விஷயங்கள்

(1) பாலர்கள் இலக்கியச் சுவைபெற வேண்டுமானால் ஆசிரியர் அதிக உற்சாகம் கொள்ளவேண்டும். அவர் தம் இனிமையான குரல்

மூலமாகப் புலவர்களின் இன்பமான நடையை வெளிப்படுத்த வேண்டும். இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர், முகமலர்ச்சி, இன்பமான குரல், ஒளி வீசும் கண்கள், புன்னகை புரியும் வாய், முதலிய அங்க லக்ஷணமுள்ளவராக இருப்பது விசேஷம். (2) ஒவ்வொரு கலாசாலையிலும், மாணவர்கள் படிப்பதற்குத் தகுந்த புத்தகங்கள் இருக்கவேண்டும். இப் புத்தகங்களை மாணவர்கள் தங்கள் வீட்டுக்கும் கொண்டுபோய் சுயேச்சையாகப் படிக்கலாம். ஒவ்வொரு புத்தகத்தையும் ஆசிரியர் படித்திருக்க வேண்டும். அப்படிப் படிக்கும்போது அவர் கீழ்க்கண்ட கேள்விகளைப் போட்டுக்கொள்ளவேண்டும் (அ) நான் களைப்புற்று இருக்கும்போது என் உள்ளத்தைக் கிளர்ச்சிசெய்து என் மனத்தை மகிழ்வித்து இந்தப் புத்தகம் எனக்குப் புது உற்சாகம் ஊட்டுமா? (ஆ) இந்தப் புத்தகத்தை சாமான்ய புத்தியுள்ள மாணவர்களும் எளிதில் படித்து புரிந்துகொள்ளக்கூடுமா? (இ) இந்தப் புத்தகம் நல்ல கலைவல்லோனால் எழுதப்பட்டு இருக்கிறதா? இது மாணவர்களுக்கு பள்ளிக்கூட வாழ்க்கைநாள் கடந்தும் இன்பம் அளிக்குமா? அல்லது உடனே சலிப்பு உண்டாக்குமா? இப்படிச் சோதித்துப் பொறுக்கி எடுக்கப்பட்ட புத்தகங்கள் இலக்கியச் சுவையை ஊட்டக் கூடும். (3) பள்ளிக்கூடங்களில் இலக்கியம் போதிப்பதற்குத் தனிப்பட்ட ஓர் விசாலமான இடம் (**Hall**) இருக்கவேண்டும். இந்த இடத்தில் இலக்கிய விஷயங்களை விளக்கிக்காட்டும் பற்பல அழகான படங்களும், ஓவியங்களும் சுவற்றில் தொங்கவிட்டிருக்கவேண்டும். இப்படங்களையும் சித்திரங்களையும் பிள்ளைகள் பார்க்கும்போது அவர்களுடைய மனத்தில் குதூகலம் உண்டாகிவிடுகின்றது. ஆங்கிலத்தில் வில்லியம் மாரிஸ் (**William Morris**), கீட்ஸ் (**Keats**) என்னும் கவிஞர்கள் தாங்கள் இயற்றிய கவிதைகள் எல்லாம் ஒரு படமூலமாக வரைந்து காட்டலாம் என்னும் கொள்கையோடு எழுதியுள்ளார்கள். கம்பர் எழுதியவை அநேகமாய்ச் சித்திரமாகவே அமைந்திருக்கின்றன. புகழேந்தி, ஒளவையார் முதலியோர் வெகு எளிய இயற்கை வருணனைகளை அழகாகத் தங்களுடைய செய்யுட்களில் எழுதியுள்ளார்கள். இப்பெரும் புலவர்களுடைய வருணனைகளைச் சித்தரிக்கலாம். இப்படியே பற்பல இலக்கிய விசேஷப் படங்களும் பள்ளிக்கூடங்களில் இருக்கவேண்டும். இப்படங்களே இலக்கிய அவாவை உண்டாக்க முதற்படியாக இருக்கின்றன.

(தொடரும்)

# ஆரம்பப் பள்ளிக்கூட பூகோள பாடம்

**J. Ramaswamy**, *Teacher*, *Kulasekharapatnam*:

1941-ல் வெளியான பூகோள ஸெலபஸ் இரண்டாவது வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்புவரை சற்று கடினமாக இருப்பதை ஆசிரியர்கள் உணர்கிறார்கள். பூகோளம் காரிய காரணத்துடன் இசைத்துப் படிக்க வேண்டியதோர் பாடம். பூகோள ஆசிரியர் துரிதமாய்ப் படம் வரைந்து விஷயங்களை வர்ணிக்கும் திறமையுடையவரா யிருத்தல் வேண்டும். இயற்கைப் பாடம், சரித்திரம் முதலியவற்றுடன் சம்பந்தப் படுத்திக் கற்பித்தலும் அவசியம். சுற்றுப் புறங்களையும், இயற்கை யமைப்பு, நதி, கால்வாய், அணை, விளைபொருள்கள் முதலியவற்றை பிரயாண முறை (**Excursions**)யைக் கையாண்டு போதித்தல் வேண்டும். பாய் பின்னுதல், கூடை முடைதல், காகிதம் செய்தல் போன்ற பிராஜெக்டுகளின் மூலம் அத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள், விளையுமிடங்கள், மண், மழை, உஷ்ணம் முதலியவற்றையும், வெளிநாட்டு வர்ணனைகளை கதா முறையிலும் கற்பித்தல் நலம். பல நாட்டு ஜனங்களின் உணவு, உடை, பழக்க வழக்கங்களை பிள்ளைகளைக் கொண்டே நடிக்கச் செய்தல், பிள்ளைகளுக்கு அப்பாடத்தில் உற்சாகத்தையும், மனத்தில் பதியும் நற்பலனையும் அளிக்கும் என்பது அநுபவத்தில் கண்ட விஷயம். உதாரணமாகப் பாலைவனப் பிரதேசம், துந்திராப் பிரதேசம் இவற்றின் ஜனவாழ்க்கை, நடையுடை பாவனைகளைக் கீழ்க் கண்டவாறு நாடகரூபமாய் நடிக்கச் செய்யலாம். இது சாதாரணமாய் ஐந்தாவது வகுப்புக்கு ஏற்றவாறு எழுதப்பட்டிருக்கிறது. பிற ஆசிரியர்களுக்கும் பயன்படும் பொருட்டு பிரசுரிக்க வேண்டுகிறேன். இது போன்று, பூகோள ஆசிரியர் ஒவ்வோர் பாடத்துக்கும் ஏற்ற முறைகளைக் கையாண்டால், முயற்சிக்கு ஏற்ற பலனை அடையக் கூடும் என்பது எனது துணிபு.

குறிப்பு:—நாடக ரூபமாய் எழுதப்பட்டு, இத்துடன் இணைக்கப் பட்டுள்ள எஸ்கிமோச் சிறுவனும், பாலைவனச் சிறுவனும் என்ற பாகம், குலசேகரன் பட்டினம், பண்டாரச் சிவன் ஞாபகச் சின்னப் பாடசாலையில் "பெற்றோர் விழா"வுக்காக நடிக்கப்பட்டது.

## பூகோள சம்பந்தமான கதை நடிப்பு

### எஸ்கிமோச் சிறுவனும், பாலைவனச் சிறுவனும்

[கரடித் தோல் போன்ற ஆடை, பனிக்குல்லாய் முதலியன அணிந்து வில், அம்பு, ஈட்டியுடன் எஸ்கிமோச் சிறுவன் வருகிறான்.]

**எஸ்கிமோ :—**(சுற்றிப் பார்த்து) இதுதான் பத்திரமான இடம். இங்கேயே சற்றுநேரம் படுத்திருப்போம். (படுக்கிறான்.)

[மகமதிய உடையணிந்த அராபியச் சிறுவன் பாடிக் கொண்டே அவ்விடம் வருகிறான். கரடிபோல் படுத்திருக்கும் எஸ்கிமோவை, கரடியென்றே நினைத்து, நடுங்கி]

**பாலைவனச் சிறுவன் :—**அரேரே, கரடிபோல் இக்கிதே. அல்லா! நீத்தான் என்னைக் காக்கணும். நம்பள்கி வேறு துணையில்லே.

(கீழே விழுந்து மூர்ச்சையாகிறான்.)

**எஸ்கிமோ :—**(சத்தம் கேட்டு விழிக்கிறான்.) சத்தம் ஏதோ மனுஷன் மாதிரி இருக்கு. ஆனால் நம் நாட்டவனல்ல. பக்கத்திலே போய் விசாரிப்போம்—(அருகில் சென்று) தம்பீ, தம்பீ! நீ, யாரப்பா? எழுந்திரு—பாவம்! பயந்தூட்டாப்பலே இருக்கு—பயப்படாதே எழுந்திரு.

**பாலைவனச் சிறுவன் :—**(கண்ணை மூடிக்கொண்டே) அப்பா! தப்பிச்சேன்—கரடி போயிட்டுதா? (கண்ணைத் திறந்து சுற்று முற்றும் பார்த்துவிட்டு எஸ்கிமோவைப் பார்த்து பயந்தெழுகிறான். ஒருவரை யொருவர் கூர்ந்து நோக்கிய பின்) நீ யாரப்பா? தெரியல்லையே! இந்த நாட்டுக்குப் புதுசா இருக்கே!

**எஸ். சிறு :—**பயப்படாதே தம்பீ! நான் ஒரு எஸ்கிமோ. நான் வசிப்பது வட அமெரிக்காவின் வட பாகம்.—என் பெயர் ஆரோரா. நீ யாரு தெரியல்லையே?

**பா. சிறு :—**நான் ஒரு பாலைவனவாசி—என் பெயர் அப்துல்லா. ஆப்ரிக்காவின் வடக்கிலுள்ள சகாராப் பாலைவனத்தின் மத்தியில் வசிக்கிறேன்.—அரே, என்ன ஆச்சரியம் உன்கி தமிழ்க்கூடப் பேசத் தெரியரான்!

**எஸ். சிறு :—**ஆம் தம்பீ! உங்களெல்லாம் பாக்கணும்னுதான் நான் தமிழ் பேசக் கத்துக்கினேன்—.

[பாலைவனச் சிறுவன் எஸ்கிமோவின் ஆடைகளைத் தடவிப் பார்க்கிறான்.]

**பா. சிறு :—**என்ன இது? கரடித் தோலையே சட்டையாப் போட்டிருக்கான்—நம்பள்கி இந்த லேஸ் சட்டையே புழுக்கம் கொடுக்கிறான்—

**எஸ். சிறு :—**எங்க நாட்டைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதுபோலிருக்கு—நான் சொல்றேன் கேளு!, நான் வசிப்பது பனிக்கட்டி நிறைந்த தூந்திராப் பிரதேசம். வருஷத்தில் நான்கு மாதம் தான் கொஞ்சம் உஷ்ணம் உண்டு, பாக்கி எட்டு மாதமும் குளிர் மிகுதி.

தண்ணீர் பனிக்கட்டியாய் உறைஞ்சிருக்கும். அந்தப் பனியைத் தாங்க இந்த ஆடைதான் வேண்டும்.

பா. சிறு :—சரிதான் நீ வசிப்பது கூரை வீடா? ஓட்டுக் கட்டா? காரை வீடா? எத்தனை மச்சு உண்டு?

எஸ். சிறு :—தம்பி! எங்க நாட்டிலே ஓலை, ஓடு, செங்கல் சுண்ணும்பு ஒண்ணும் கிடையாது—அங்கே உறைஞ்சிருக்கும் பனிக்கட்டியைக் கொண்டே எங்கள் வீடுகளைக் கட்டுகிறோம் (தன் மூட்டையிலுள்ள ஓர் படத்தை எடுத்து அப்துல்லாவிடம் காட்டி) இதோ பார் இது தான் என் வீட்டின் படம் இதை 'இக்லூ' என்று அழைக்கிறோம்.

பா. சிறு :—(படத்தைப் பார்த்த வண்ணம்) ஆமாம்—இந்த பனி வீடு கோடையில் உருகி விடாதா?

எஸ். சிறு :—ஆம் அதனால் தான் நாங்கள் கோடையில் தோலால் செய்த கூடாரங்களில் வசிப்போம்! உங்கள் வீடுகள் எப்படிப்பட்டன?

பா. சிறு :—நாங்கள் அநேகமாய்க் கூடாரங்களில் தான் வசிப்போம்— நீ அரிசிச் சோறு சாப்பிடரதா அல்லது கோதுமையா?

எஸ். சிறு :—எங்களுக்கு அரிசியும் கோதுமையும் கிடைப்பதில்லை. மீன் தான் முக்கிய உணவு. மான் மாமிசத்தையும் சாப்பிடுவோம்.

பா. சிறு :—அப்படின்னு உங்க நாட்டிலே என்ன தானியம் தான் விளையுது?

எஸ். சிறு :—பனி மூடிய எங்கள் நாட்டில் ஒன்றுமே விளைவதில்லை. கோடையில் மாத்திரம் கொஞ்சம் பனி உருகும். அக்காலத்தில் ஒருவிதப் பாசி முளைக்கும். இந்தப் பாசி தான் அங்கு வசிக்கும் 'கரிபூ' என்ற மானின் ஆகாரம். இம்மானின் பால், மாமிசம் எங்களுக்கு உணவாகிறது.

பா. சிறு :—இத்தெல்லாம் எங்க வாப்பா கூடச் சொன்னதில்லையே. ஆமாம்! நீங்க எப்படிப் பிரயாணம் பண்ணுவிங்க? ரயில்லேயா? மோட்டாரிலேயா? அல்லது ஏரோப்ளேனிலேயா?

எஸ். சிறு :—தம்பி! ரயில், மோட்டார், ஏரோப்ளேன் எல்லாம் இங்கே வந்து தான் பார்த்தேன். இதெல்லாம் எங்க நாட்டிலே கிடையாது (மற்றொரு படத்தைக் காட்டி) இதோ பார், இது தான் நாங்கள் உபயோகிக்கும் வண்டியின் படம். சக்கரங்கள் கிடையாது. எலும்புகளாலும் தோலாலும் கட்டப்பட்டது. பனிக் கட்டியில் வழுக்கிச் செல்லும். நாய்களையும், மான்களையும் பூட்டி இழுக்கச் செய்கிறோம். இதற்கு 'ஸ்லெட்ஜ்' என்று பெயர்—நீங்கள் எப்படிப் பிரயாணம் பண்ணறது?

பா. சிறு :—நாங்கள் வசிப்பது மிக உஷ்ணமான பாலைவனம். எங்கும் மணல் நிறைந்திருக்கும். தண்ணீர் என்பதே அநேகமாய்க் கிடை

யாது. பயிர் பச்சையே மிக அரிது. இந்த மணல் பாலைவனத்தைக் கடந்து செல்ல 'பாலைவனக் கப்பலை' உபயோகிக்கிறோம்.

எஸ். சிறு :—ஏண்டா தம்பி! கப்பல் தண்ணீரிலே போகும்னு பாத்திருக்கேன். உங்க ஊர்க் கப்பல் மணல்லேயுமா போவுது? ஆச்சரியமாயிருக்கே!

பா. சிறு :—இல்லப்பா! பாலைவனக் கப்பல்னு ஒட்டகத்தை அழைக்கிறோம். அது தான் எங்களுக்கு வாஹனம். (வில் அம்பு, ஈட்டி முதலியவற்றைச் சுட்டிக் காட்டி) இது என்ன! வில், அம்பு, ஈட்டி எல்லாம் வச்சிருக்கயே—எங்காணும் யுத்தத்துக்குப் புறப்பட்டாயா? என்ன?

எஸ். சிறு :—இவை தான் எங்கள் ஆயுதங்கள்—இதோ பார்! இந்த மான் கொம்புகளை ஈட்டியாகக் கொண்டு ஸீல், வால்ரஸ் போன்ற திமிங்கிலங்களை வேட்டையாடுவோம். வில் அம்பு கொண்டு வெண் கரடி, நரி, வெள்ளை ஒநாய் முதலிய பிராணிகளை வேட்டையாடி ரோமத் தோல் ஆடைகளையும், மாமிசத்தையும் பெறுவோம்—நீங்கள் எப்படி ஜீவிக்கிறீர்கள்?

பா. சிறு :—பாலைவனத்தின் மத்தியில் சில இடங்களில் நீர் ஊற்றுக்களும், ஈச்ச மரச் சோலைகளும் உண்டு. இவ்விடத்திற்கு 'ஒயஸிஸ்' என்று பெயர். இங்கு கிடைக்கும் ஈச்சம்பழம் ஓர் முக்கிய உணவு. சுற்றியுள்ள புல் தரைகளில் ஆடுகளை வளர்க்கிறோம். ஆட்டிறைச்சியும் எங்களுக்கு உணவாகிறது. நாங்கள் ஒட்டகங்களையும் அதிகமாய் வளர்க்கிறோம். பாலைவன ஓரங்களிலுள்ள கடற்கரைப் பட்டிணங்களிலிருந்து, பல பொருள்களையும் ஒட்டகங்களின் மூலமாய்க் கொண்டுவந்து, வியாபாரம் செய்வதும் எங்களது தொழில்—உன் விஷயத்தைப்பற்றி அறிந்துகொண்டதில் மிகவும் சந்தோஷம்—நீ, எது வரை படித்திருக்கிறாய்?

எஸ். சிறு :—எங்கள் நாட்டிலே தான் கிராமமோ, பட்டினமோ கிடையாதே—எங்கள் ஆகாரம் தேடவே நேரம் போதாது. நாங்கள் எங்கே படிக்கிறது? எழுத்துப் படிப்பு வாசனையே தெரியாதப்பா—அதான் இப்படி எங்காணும் போய்ப் படிப்போம்னு புறப்பட்டேன்.

பா. சிறு :—அது தான் அண்ணே! நானும் வந்தது. அந்தப் பாலைவனத்திலே எங்களுக்கு எழுதப் படிக்கப் பள்ளிக்கூடங்களேது?—ஆம் இது தான் நல்ல யோஜனை! நாம் இந்தப் பள்ளிக்கூடத்திலாவது கொஞ்ச நாள் படித்து நம்ப அறிவை விருத்தி பண்ணுவோம்!

எஸ். சிறு :—ஆமாண்டா தம்பீ! அதுதான் ரொம்ப நல்லது. அப்படியே செய்வோம். போவோம் வா!

(இருவரும் போகிறார்கள்).

# பிள்ளைகளின் கையெழுத்து—3

R. Mahadevan, B.A., L.T.

(மாசி மீ 365-ம் பக்கத் தொடர்ச்சி)

## சீராக எழுதுதல்

உபாத்தியாயர்கள் எல்லோரும் பள்ளிக்கூடங்களில் பலகையில் எழுதுகிறார்கள். இவர்கள் எழுத்தில் எவ்வளவு வித்தியாசங்கள் காணப்படுகின்றன! சிலர் பலகையில் பத்து வரிகளுக்குமேல் எழுத மாட்டார்கள். எழுத்துக்கள் பெரியதாக இருக்கும். ஆரம்ப ஆசிரியர்களின் கையெழுத்து பெரியதாகத்தான் இருக்கவேண்டும். அப்பொழுது தான் பிள்ளைகள் எளிதில் பலகையில் இருப்பதைப் படிக்க முடியும். மற்றும் சிலர் சிறிய எழுத்துக்களாக எழுதி பலகையில் 'எறும்பு ஊறுவதுபோல' இருபது அல்லது முப்பது வரிகள் எழுதிவிடுவார்கள். இது கீழ்வகுப்புக்களுக்குச் சிறந்தது அல்ல. எழுத்துக்கள் சிறியதாயினும் பெரியதாயினும் அவை ஒரே சீராக இருத்தல் வேண்டும்.

எழுத்துக்கள் சீராக அமையவேண்டுவதற்குக்கோடுகள் அவசியம். இதற்காகப் பாடசாலைப் பலகைகளில் இரட்டைக்கோடுகள் போட்டிருப்பது நலம். உபாத்தியாயர்களுக்குக் கோடுகளில்லாமல் எழுதும் சக்தி இருந்தபோதிலும் பிள்ளைகளின் நன்மையைக்கருதி ஆசிரியர்கள் கோடுகளை அவசியம் உபயோகிக்கவேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகளும் கோடுகளின் நடுவே எழுதுவார்கள். கோடுகளின் நடுவில் எழுதுவதனால் எழுத்துக்களின் உயரம் ஒரே அளவாக இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. பிள்ளைகளின் கையெழுத்தை சீர்படுத்த கோடுகள் உதவிய போதிலும் ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையின் கையெழுத்தையும் கவனித்தாலன்றி அவர்களின் எழுத்து நன்றாக இராது. ஏனெனில் சிலர் அவசரமாக எழுதி கோடுகள் இருப்பதையே கவனிக்கமாட்டார்கள்.

எழுத்துக்கள் சீராகவும் ஒழுங்கான வடிவத்தோடும் அமைவதற்கு மெதுவாக எழுதுதல் அவசியம். தெளிவாக எழுதுவதற்கு இப்பழக்கம் இன்றியமையாதது. ஆரம்பத்தில் மெதுவாகவும் தெளிவாகவும் எழுதப்பழகிக்கொண்டால் வேகமாக எழுதும் சக்தி தானே வந்துவிடும்.

பிள்ளைகள் மெதுவாக எழுதவேண்டுமென்றால், ஆசிரியர்களும் நிதானமாக எழுதுதல் அவசியம். இதன் கருத்து ஆசிரியர்களும் பிள்ளைகள் ஒரு பக்கம் எழுதுவதற்கு எடுத்துக்கொள்ளும் நேரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது அல்ல. ஆசிரியர் ஒவ்வொரு எழுத்தையும் தெளிவாகவும் அழகாகவும் எழுதுவதற்கு வேண்டிய மனப்பான்மையை

யும் ஜாக்கிரதையையும் எடுத்துக்கொள்ளுகிறார் என்று பிள்ளைகளுக்குத் தெரியவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் ஒவ்வொரு எழுத்தின் மேலும் கவனம் செலுத்துவார்கள். இம்மாதிரி ஒவ்வொரு எழுத்திலும் கவனம் செலுத்துகிறார்களா என்று பார்ப்பது ஆசிரியர்களின் கடமை. ஆதலால் பிள்ளைகள் பள்ளியில் சேர்ந்து ஒரு வருஷம் வரையில் வீட்டில் எழுதாமல் பள்ளிக்கூடங்களிலேயே எழுதுவது நல்லது. வீட்டில் எழுதும்போது தவறான எழுத்துப் பழக்கங்கள் ஏற்பட்டுவிட்டால் பிறகு திருத்துவது கஷ்டமாக முடியும்.

உயரத்தையும் தவிர, சீரான கையெழுத்துக்கு இன்னொரு லக்ஷணம் உண்டு. அதாவது எழுத்தின் பருமன். அச்சடித்த புத்தகங்களில் ஒவ்வொரு வரியிலும் ஒரே எண்ணிக்கையுள்ள எழுத்துக்கள் காணப்படும். இதேமாதிரி கையெழுத்தும் இருக்கவேண்டுமானால் முதலிலேயே பழகுவது அவசியம்.

மூன்றாவதாக ஒரு வார்த்தைக்கும் இன்னொரு வார்த்தைக்கும் நடுவில் இடம் விடவேண்டியது அவசியம். விடப்பட்ட இடமும் ஒரே அளவாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் எழுதும்போதும் படிக்கும்போதும் கருத்து விளங்கும். இடைவெளி ஒரே சீராக அமைவதற்கு இரண்டு அல்லது மூன்று வருஷங்கள்கூட ஆகலாம். ஆனபோதிலும் பிள்ளைகளுக்கு இதன் அவசியத்தைப்புகட்டுவது முக்கியமானது.

வார்த்தைகளின் நடுவே சீராக விடும் இடத்தையும் தவிர, இரண்டு வரிகளின் இடையே இருக்கும் தூரமும் சமமாக இருத்தல் அவசியம். இப்பழக்கமும் ஏற்படுத்துவதற்கு நாளாகலாம். இதையும் ஆசிரியர்கள் கவனித்தல் வேண்டும்.


சீரான கையெழுத்தின் கடைசி அம்சம் வரிகள் கோணாமல் இருப்பது. சிறு பிள்ளைகளின் கையெழுத்தில் இரண்டு வரிகள் 'முட்டிக் கொள்ளுவது' சர்வ சாதாரணமானது. இதை நீக்கவேண்டுமானால் இரட்டைக்கோடுகள் உள்ள புத்தகங்களிலேயே பிள்ளைகள் எழுத வேண்டும். கீழ் வகுப்புகளில் ஒருபொழுதும் கோடுகள் இல்லாத புத்தகங்களில் எழுதுதல் கூடாது.

சுமார் நாற்பது பிள்ளைகள் உள்ள வகுப்புக்களில் ஒவ்வொருவருடைய எழுத்தையும் உற்றுக் கவனிப்பது கஷ்டமான காரியமாக இருக்கலாம். இவ்வேலையைச் சுலபமாக்குவதற்கு குறிப்பிட்ட கஷ்டமான எழுத்துக்களையுடைய வார்த்தைகளை நான்கு அல்லது ஐந்து வரிக்கு மேற்படாமல் எழுதும்படி செய்தால், பிள்ளைகளுக்கு நன்றாக எழுதும் பழக்கத்தை உண்டாக்குவது முடியாத காரியம் அல்ல. எந்த அம்சத்தில் ஒவ்வொரு பிள்ளையின் கையெழுத்தும் பிழையுள்ளது என்று சுட்டிக்காட்டுதல் அவசியமானது.

(தொடரும்)

# கலையும் கைத்தொழிலும்—X

R. M. Savur, *Divisional Inspector of Schools, Coimbatore.*




தென்னிந்திய ஆசிரியன் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

# ஆரம்பப் பாடசாலைப் பிரச்னைகள்*

S. T. ராமானுஜ அய்யங்கார்.
கூட்டுக்காரியதரிசி, தென்னிந்திய ஆசிரியர் சங்கம்.

ஆசிரியர்களின் பிரச்னை

நான் 25 வருஷங்களாக தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் சார்பாக உழைத்துவரும் அனுபவத்தின் பயனாக நீங்கள் ஒருவித சந்தேகமும் இல்லாமல் இச்சங்கத்தின் நோக்கங்களுக்கும் திட்டங்களுக்கும் பரிபூர்ண ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியர்களின் தொழிலிலுள்ள குறைபாடுகளை நீக்க நாம் ஆசிரியர் சங்கங்களிலும், வெளியேயும் போராடவேண்டும். நமது மாகாணத்திலுள்ள கல்வி இலாகா, ஆசிரியர்கள் தமது வேலையைத்திறன்பட நடத்துவதற்கு இன்றியமையாத சுற்றறிக்கைகள், முதலிய பிரசுரங்களை உதவமறுக்கின்றது. பலவிதமான மானேஜ்மெண்டுகள், கிரேட்வித்தியாசம், சம்பளத்தில் பேதங்கள் இவைபோன்ற காரணங்கள் ஆரம்ப ஆசிரியர்களின் ஒற்றுமைக்குப் பெரும் பாதகமாக இருக்கின்றன. ஆயினும் நமக்கு நாமே விரோதிகளாக இருந்துவருகிறோம். நமது தொழிலை நடத்துவதிலும் ஆசிரிய சங்கங்களின் வேலையைப்பற்றிய கடமைகளையும் நாம் இன்னும் உணரவில்லை. ஆதலால் நம்மில் ஒற்றுமையின்றி, தகுந்த சம்பளதிட்டங்களை வற்புறுத்தவும், நமது அந்தஸ்தை நிலைநாட்டவும், குறைகளைத் தீர்க்கவும் சக்தியின்றி முணுமுணுப்பவர்களாக இருந்துவருகிறோம்.

நமது குறைகளெல்லாம் தீரவேண்டுவதற்கு தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் நிர்மாணதிட்டத்தின் அம்சங்களாகிய (1) சங்கங்கள் ஏற்படுத்தல் (2) கண்காணிப்பு (3) பிரசுரம் (4) பாதுகாப்பு (5) போதனை சக்தியை விருத்தி செய்தல் ஆகியவைகளை ஏற்படுத்தியிருக்கிறது. மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்றுவோமானால், இப்பொழுது இருப்பது போல் கல்வி யந்திரத்தின் தட்டுமுட்டுக் கருவிகளாக இல்லாமல் மூலக் கருவிகளாக ஆவோம். தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் அறைகூவும் வாக்கியம் "தன் கையே தனக்குதவி" என்பது. ஆதலால் நாம் அரசியல் கூட்டங்களின் குழப்பத்தில் அகப்பட்டுக்கொள்ளாமலிருக்க வேண்டும். ஆயினும் தேசத்திற்கு இன்றியமையாத படிப்பின்மையை ஒழித்தல், மூலக்கல்வியை பரப்புதல், கிராமப் பாடசாலைகளை புனருத்தாரணம் செய்தல், ஸ்தல ஸ்தாபனங்களில் ஆசிரியர்களின் குரல் கேட்கும்படி

*மலையாள ஜில்லா ஆரம்ப ஆசிரியர்களின் சங்கத்தின் ஆதரவின் கீழ் பாலக்காட்டில் 14-2-42-ல் செய்த தலைமை உரை.

செய்தல் ஆகிய வேலைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். கல்வி இலாகாவின் 'நவாபுகள்', பள்ளிகளை நடத்தும் 'கங்காணிகள்' இவர்கள் இழைக்கும் இன்னல்களைத் தவிர்த்து நமது தொழிலைச் செவ்வனே நடத்துவதற்கு வேண்டிய பாதுகாப்பை நாம் வற்புறுத்துவது தேசசேவகர்கள் என்ற ஹோதாவில் மிகவும் பொறுத்தம் உடையதாகும். ஆரம்ப ஆசிரியர்களை பட்டினிபோட்டு முணுமுணுப்பவர்களாக வைத்திருப்பது பள்ளியில் இருக்கும் குழந்தைகளுக்கு பெரிய அநீதிசெய்வதாகும். ஆசிரியர்களின் விலங்குகளை நீக்குவது எல்லோருடைய கடமையாம்.

### ஆரம்பக் கல்வி பிரச்னை

ஆசிரியர்களாகிய நாம் நமது குறைகளை கவனிப்பதோடு நில்லாமல் ஆரம்பக் கல்வியின் குறைகளையும் கவனிக்கவேண்டும். இச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தார் 1936-௵ வெளியிட்ட அறிக்கையின் விளைவுகளை ஆராய வேண்டியிருக்கிறது. பலதிறப்பட்ட மானேஜ்மெண்டும், கிராண்ட் விநியோக நுட்பங்களும், 'ரூல்கள்' பொழியும் கல்வி இலாகாவின் போக்கும் குழந்தைகளின் படிப்புக்கு சாதகமாக இருக்கின்றதா, அல்லது பாதகமாக இருக்கின்றதா என்பது தான் கேள்வி. மேற்கூறியவைகள் குழந்தைகளை வீட்டிலிருந்து பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப உதவுகின்றனவா? ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் குழந்தைகளின் அறிவு, ஆற்றல், மனோபாவம் இவைகளை வளர்க்கின்றனவா? குழந்தைகளின் தனிப்பட்ட தன்மை (personality) வளர்க்கப்படுகிறதா? தேசத்தின் தேவைக்குத் தகுந்தபடி பள்ளிக்கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா?

கல்வி இலாகா 'ரிபோர்ட்டுகள்' என்ன சொல்லுகின்றன? 1936—37-ல் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் 45,935 பாடசாலைகள் இருந்தன. 1940-ல் பள்ளிக்கூடங்களின் தொகை 40,796-ஆகக் குறைந்துவிட்டது. சுமார் 5000 பள்ளிகள் மூடப்பட்டன. நான்கு வருஷங்களில் அதிகமாகப் பள்ளியில் சேர்ந்தவர்களின் தொகை 124,094. அதாவது சராசரி அதிகமானது ஒரு வருஷத்திற்கு 31,016. முற்றுப்பெற்ற பள்ளிகள் இந்த நான்கு வருஷங்களில் 4916 அதிகமாயிருக்கின்றன. 500-க்கு மேற்பட்ட ஜனத்தொகையையுடைய பள்ளியில்லாத கிராமங்கள் இன்னும் 2810 இருக்கின்றன. 28 நகர 'ஸெண்டர்களிலும் 7 கிராம 'ஸெண்டர்களிலுமே' கட்டாயக் கல்வி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கப் பள்ளியில் ஒவ்வொரு பிள்ளைக்கும் செலவழியும் தொகை ரூ. 11–8–0. ஸ்தலஸ்தாபனப்பள்ளியில் ரூ. 9–4–0. உதவிபெறும் பள்ளியில் ரூ. 7–5–0. ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் பள்ளியில் ரூ. 63. கல்வி இலாகாவின் அதிகாரம் அதிகமாகி பொது ஜன ஆதரவு குறைந்துவிட்டது. தாலுக்கா கல்விக் கமிட்டிகளின் வாழ்நாள் (Taluk Education Committees) இன்றைக்கோ, நாளைக்கோ

முடிந்துவிடும்போலிருக்கிறது. இன்ஸ்பெக்டர்கள், டிவிஷன் இன்ஸ்பெக்டர்கள் இவர்களின் சாதாரண 'இன்ஸ்பெக்ஷன்' எதிர்பாராத 'இன்ஸ்பெக்ஷன்கள்' அதிகமாகி வருகின்றன. "அரசாங்கத்தாருக்குச் செலவின்றி" புதிய பாடதிட்டங்களுக்குத் தகுந்த புனர்பயிற்சிகள், பொருட்காட்சிகள் நடந்துவருகின்றன. ஆசிரியர்களின் சம்பளங்கள், கிராண்டுகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆசிரிய சங்கங்கள், மலையாளத்திலும்கூட தங்கள் வேலைகளைச் செய்கின்றன. பள்ளிக்கூடங்களிலிருந்து படித்தவர்கள் அதிகமாக வெளியேறுகிறார்கள். இதுதான் அரசாங்கத்தார் 5 வருஷங்களில் சாதித்த காரியம்.

### அரசாங்கக் கோள்கையின் குறைகள்

அரசாங்கக் கொள்கையின் குறைகளில் பல உள்ளன. குழந்தைகளின் படிப்பின்மூலம் தேசத்திலுள்ள மக்களைப் படித்வர்களாகச் செய்வதென்பது தேசமுன்னேற்றத்துக்குத் தகுதியுடையதல்ல. ஐந்து வருஷங்கள் மாத்திரம் குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பது அவர்களின் சக்தியை வீணாக்குவதாகும். கல்வி இலாகா மனதில் கொண்டுள்ள எழுதப் படிக்கத் தெரியும்படிப்பு நடைமுதலில் வரமாட்டாது. ஏனென்றால் பிள்ளைகள் இடம் மாறுகிறார்கள்; பெற்றோர்கள் ஓரிடத்தைவிட்டு இன்னொரு இடத்துக்குச் செல்லுகிறார்கள். பல வகுப்புக்களுக்குப் போதிக்கும் முறை ஒன்றும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பள்ளிக்கூடங்கள் 1—5 வகுப்புக்களைக் கொண்டதனாலேயே கல்வி மேம்பாடு அடைந்துவிட்டதென்று சொல்லமுடியாது. ஏதோ ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறைவாக பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்குமாத்திரம் பள்ளிக்கூடங்களை மூடுவது கிராமங்களில் அஞ்ஞான இருளைப் பரப்புவதாக முடியும். புதிய "ரூல்களின்" பலனாக பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்பில் சேருபவர்களைக் குறைத்தும், இருப்பவர்களை 4, 5 வகுப்புக்களில் நிரவியும் வருவதனால், தேக்கமும், சிதறலும் இப்பொழுது இல்லை என்று சொல்ல முடியாது. இன்ஸ்பெக்டர்கள் புள்ளி விவரங்களிலே ஈடுபட்டிருப்பதனால் கல்வி சம்பந்தமான உதவியை அவர்கள் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கொடுப்பதில்லை. புதிய பாடதிட்டங்கள் ஆசிரியர்களின் சக்திக்கு மேற்பட்டதாக இருக்கின்றன. நாள் ஒன்றுக்கு 5 மணி வீதம் வருஷத்திற்கு 220 நாட்கள் பள்ளிக்கூடம் வரவேண்டியிருப்பதால் பிள்ளைகள் பலஹீனப்படுத்தப்படுகிறார்கள். கல்வி இலாகாவின் ஏதேச்சாதிகாரத்தால் பொதுஜனக் கூட்டுறவு தவிர்க்கப்படுகிறது. மாகாண முழுவதுக்கும் ஒரே திட்டத்தை ஏற்படுத்துவதால் சுற்றுப்புறத்திற்கும் பள்ளியின் படிப்புக்கும் சம்பந்தமில்லாமல் போகிறது. புத்தகங்களும் நோட்டுகளும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் புகுந்துவிட்டன. ஆசிரியர்களின் சம்பளங்கள், கிராண்டுகள் இவைகளை உயர்த்தும் கல்வி இலாகாவின் முயற்சிகள் சம்பள பாக்கிகளையோ,

பினுமி சம்பளங்களையோ, உத்தியோக நீக்குதலையோ, நினைத்தபோ தெல்லாம் போடும் அபராதங்களையோ நிறுத்தவில்லை.

ஸ்தல ஸ்தாபனங்கள் 'கிராண்டு வெட்டுகளுக்கு' பயப்படவேண் டியதில்லை. ஆதலால் கல்விமுயற்சி ஒரு தலைப்பட்டதாகவே இருக்கிறது. குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது அவர்கள் படிப்பின் ஒரு அம்சம் தான் ஆகும். டிபார்ட்மெண்டாரின் அளவுகோலினல் குழந்தைகளின் கல்வித் தேர்ச்சியை அளக்க முடியாது. பள்ளியில் வைக்கப்படும் ரிகார்ட் பிள்ளைகள் மேல் வகுப்புக்குப் போனதையும் 'தேக்கத்தை' தவிர்த்ததையும் காண்பிக்கின்றதேயல்லாது பிள்ளைகளின் அறிவு வளர்ச் சியைக் காண்பிக்கவில்லை. சுயேச்சையுள்ள நாடுகளிலுள்ள பள்ளிக் கூடங்களிலிருக்கும் பிள்ளைகளின் அனுபவத்திற்கும், நமது பிள்ளைகளின் அனுபவத்திற்கும் எவ்வளவோ பேதமுண்டு. இப்போதுள்ள கல்வி முறை மதத்தைப்பற்றிய கோவில்கள், ஆகமங்கள், அர்ச்சகர்கள், 'எண்டோமெண்டு போர்டுகள்' இந்த ரீதியில்தான் நடந்துவருகிறது. இம்முறைக்குப் பதிலாக குழந்தைகள், ஆசிரியர்கள், தேசம் ஆகிய மூன்றுக்கும் உகந்த கல்வி முறையை ஏற்படுத்துவது நமது கடமை; அது பொதுஜனங்களின் கடமையுமாகும்.

(தொடரும்)

**திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு**

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. **0—8—0.** (தபால் சிலவு பிரத்தியேகம்)

—: வேண்டுபவர்கள் :—

**ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்**
ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

—: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :—

# துணி பை தைத்தல்

ஸ்ரீமதி லி. காந்தா

(373-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற மாதத்தில் சிறு குழந்தைகள் எவ்விதமாக அட்டையில் பை தைப்பது என்பதைப்பற்றி கூறினோம். பள்ளியில் கற்கும் ஒவ்வொரு குழந்தையும் சாதாரணமாக தங்களுடைய தினசரி வாழ்க்கையில் உபயோகப்படுத்தும்படியான சாமான்களை செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். முக்கியமாக ஒவ்வொரு சிறு குழந்தையும் புஸ்தகங்களை வைத்துக்கொள்வதற்காக துணி பைகள் வைத்துக்கொண்டு இருக்க வேண்டும். ஒரே வகுப்பிலிருக்கும் குழந்தைகள் ஒரே விதமான கலர் பைகள் உபயோகித்தல் சாலவும் நன்று. அப்படியானால் அவைப் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

துணியில் பை தைப்பதற்கு கீழ் கண்டவை அவசியமாக கவனிக்கப்படவேண்டும்.

1. துணி நன்றாக இருக்க வேண்டும்.

2. அதிக விலையுயர்ந்த துணி அவசியமில்லை.

3. ஊசியால் தைப்பதற்கு துணி மெதுவாக இருக்க வேண்டும்.


4. அதிக அகலம் உள்ளதும், அல்லது அகலம் குறைவுள்ளதும், உபயோகப்படாது.

**வேண்டிய உபகரணங்கள் : Materials Required.** வர்ண லாங் கிளாத் அல்லது பாப்ளின். கலர் ரிப்பன்கள், ஊசி, வர்ண நூல்கள்.

**பையின் வடிவத்தைக் கத்திரித்தல், Cutting the Pattern:** முதலில் பையின் வடிவத்தை ஒரு காகிதத்தில் கத்தரித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அது சரியாகவரும்.

**அளவு:** நீளம் 18" அங்குலம், அகலம் 12 அங்குலம் துணி எடுத்துக்கொள்,

அதை பக்கத்தில் கண்டபடி கத்தரிக்கவும். ஒவ்வொரு பைக்கும், கண்ட அளவுப்படி இரண்டு துணிகள் வேண்டும்.




**Stage 1.** முதலில் இரு துணிகளை வைத்து தைக்க வேண்டும். ஆகையால் இரண்டு துணிகளையும் வைத்து பொத்தான் தையல் கலர் நூலில் போடவேண்டும்.

**Stage 2.** படத்தில் குறித்திருப்பதுபோல் மேல் இரண்டு துணிகளையும் சேர்த்து தைக்காமல் தனித்தனியாய் தைக்கவேண்டும். அதற்கும் வர்ண நூலே நல்லது. தனித்தனியாய் தைப்பதின் காரணம் யாதெனில் கையை உள்ளே விட்டு புஸ்தகங்கள் முதலியன வைப்பதேயாம்.

**Stage 3.** இவ்விதமாக பை முழுவதும் பொத்தான் தையல் தைத்த பிறகு ஓரங்களில் ரிப்பன் வைக்கவேண்டும். அதற்கு பையின் கலருக்கு ஏற்றதுபோல் ரிப்பன் வைப்பது நல்லது. ரிப்பனின் அகலம் 1 அங்குலம் இருந்தால் போதும். அதை சரியாக மடித்து, பையின் ஓரத்தில் வைத்து, சாய்ப்பு தையல் ஒருபக்கம் முழுவதும் போட்டுவிட்டு மற்றொரு பக்கமும் அதே விதமாக தைக்கவேண்டும். மேற் கூறியபடி வாயின் பக்கத்தில் ஓரத்தில் தனித்தனியாய் ரிப்பன் வைக்கவேண்டும்.

**Stage 4.** கடைசியாக பையைப் பிடித்து தூக்குவதற்கு கைப்பிடி வைக்க வேண்டும். அதற்கும் ரிப்பனையே உபயோகப்படுத்தலாம். படத்தில் காண்பித்திருப்பதுபோல் ரிப்பனை வைத்து கெட்டி தையல் போடவேண்டும்.

பை இவ்விதமாக தைக்கப்பட்டால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இருந்தபோதிலும் பையின் இரு மத்தியிலும். கோழியோ பட்டுப்பூச்சியோ வரைந்து சங்கலி தையலால் தைத்தால் அப்பொழுது பை மிகவும் அழகாக இருக்கும்.

# செய்தித் திரட்டு

## திருச்செங்கோடு தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், கொங்கணாபுரம்

8—2—42-ல் இவ்வாண்டு மகாசபைக் கூட்டம் ஸ்ரீ R. வெங்கட்டராமய்யர் தலைமையில் நடைபெற்றது. நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சில முக்கியமான தீர்மானங்கள் :—

1. சேலம் ஜில்லா போர்டு அபராத உத்தரவுகள் ஆசிரியர்களைப் பாதிப்பதால் அவைகளை நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

2. எல்லாருக்கும்போல் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் யுத்த அலவன்ஸ் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

3. ஆசிரியர்களுக்கு இடத்திற்குத் தக்கபடி இல்லாமல் கிரேடுக்குத்தக்கபடி சம்பளம் கொடுக்கவேண்டும்.

4. கைத்தொழில் போதிக்கும் ஆசிரியர்கட்கும் ஓர் சம்பள விகிதம் ஏற்படுத்தவேண்டும்.

5. தற்காலம் தினம் 6 மணி நேரம் வேலை செய்வது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கஷ்டமாகவிருப்பதால் அதை முன்போல் தினசரி 5 மணி நேரமாக்கவேண்டும்.

6. சமீபத்தில் வந்துள்ள லோகல் போர்டு ஊழியர்களின் விதிகள் தற்போதுள்ள தண்டனைகளைவிட மிகக் கடுமையாக இருப்பதால் காருண்யமுள்ள கவர்மெண்டாரை அதைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

7. நீண்ட விடுமுறைகளுக்கு கிராம முனிசீப் அத்தாட்சி பெறவேண்டுமென்ற உத்தரவை ரத்து செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

---

## ஆரம்ப பாடசாலை, ஸ்ரீவாஞ்சியம்

9உ முதல் 14உ வரை சுகதார வாரம் கொண்டாடப்பட்டது. 9உ சுகாதாரப் பிரசங்கம்; 10உ சங்கீதப்போட்டி; 11உ பந்தய விளையாட்டுகள், 12உ மாணவர்களுள் சுகாதாரவிஷய சம்பாஷனை; 14உ படங்களுடனும் பாடல்களுடனும் ஊர்வலம். பிறகு உள்ளூர் பஞ்சாயத்துபோர்டு பிரசிடெண்டு அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் கூடிற்று. அதில் நன்னிலம் தலைமை ஆசிரியர், ஹெல்த் இன்ஸ்பெக்டர், உள்ளூர்

கந்தசாமி தேசிகர், தலைவர் எல்லாரும் வெகு அழகாகப் பேசினார்கள். தலைமை ஆசிரியர் வந்தனோபசாரம் கூறினார்.

---

## ஆரம்ப ஆசிரியர் யூனியன், ராசிபுரம்

15—2—42-ல் பொதுச் சபைக்கூட்டம் நடைபெற்றது. யூனியன் தலைவர் ஸ்ரீ S. ராமசாமி அவர்கள் யூனியனை விஸ்தரிக்கும் விஷயமாகப் பேசினார். காரியதரிசி ஸ்ரீ ஜேம்ஸ் என். செல்வதாஸ் அவர்கள் இந்த யூனியனை சேலம் கில்டுடன் இணைத்துக்கொள்வதால் இதை விஸ்தரிப்பதாயும், கில்டு தென்னிந்திய ஆசிரிய சங்கத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால் இந்த யூனியனை பலப்படுத்துகிறோம் என்றும் பேசிய பின் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. பின்பு, யுத்தஅலவன்ஸ், தினசரி வேலை, காஷுவல் லீவு, இலவசப்படிப்பு முதலிய விஷயங்களைப் பற்றித் தீர்மானங்கள் நிறைவேறின.

---

## போர்டு ஆரம்ப ஆண்பாடசாலை, ஓடப்பட்டி. (மதுரை)

### (a) ஆரம்ப ஆசிரியர் சங்கம், இடையக்கோட்டை.

14—2—42-ல் இச்சங்கக்கூட்டம் ஸ்ரீ சிவனையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆஜர் 21 அங்கத்தினர்கள்.

ஐந்தாம் வகுப்புக்கு "வாகனங்கள்" என்ற பாடத்தை ஸ்ரீ T. M. மாலீசுவரய்யர் அவர்கள் போதித்தார்.

பெண் கல்வி என்ற வியாசத்தைப்பற்றி ஸ்ரீ S. M. டேவிட் ராஜ் அவர்கள் பேசினார்.

ஸ்ரீ ஜம்னலால் பாஜாஜ் அவர்களின் அகால மரணத்திற்கு இச் சங்கம் அனுதாபம் காட்டி ஓர் தீர்மானம் நிறைவேறியது.

### (b) ஷை பாடசாலை பெற்றோர் சங்கம்

14—2—42-ல் இச்சங்கக் கூட்டம் கர்ணம் ஸ்ரீ பரஞ்சோதி ராமலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிற்று. சுமார் 100 அங்கத்தினர்கள் ஆஜர்.

"கிராம சீர்திருத்தம்' என்பது பற்றி தமிழ்பண்டிதர் ஸ்ரீ சுந்தரசாமி அய்யர் அவர்கள் பேசினார்.

"தற்கால அரசியலும் பெற்றோர் கடமையும்" என்பதுபற்றி ஸ்ரீடேவிட் பாண்டியன் அவர்கள் பேசினார்.

பிறகு தலைவர் அவர்கள் வீட்டில் எல்லாருக்கும் சாப்பாடும் காப்பியும் வழங்கப்பட்டது.

---

## செஞ்சி தாலுகா பெண்பாடசாலை உபாத்தியாயனிகள் சங்கம், செஞ்சி.

21—2—42-ல் இச்சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா சக்கிரா புரம் பெண் பாடசாலையில், விழுப்புரம் ரேஞ்சு ஸப் அஸிஸ்டெண் இன்ஸ் பெக்ட்ரஸ் ஸ்ரீமதி **Miss. A.** டொரோதா, **B.A., L.T.**, அவர்கள் தலைமை யில் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சீனியர் இன்ஸ்பெக்டரும் உதவி இன்ஸ்பெக்டரும் விஜயம் செய்திருந்தனர்.

கடவுள் வணக்கத்திற்குப்பிறகு 'பாடசாலையின் நிர்வாகமும் பிராஜெக்ட் மெத்தட் முறையும்'' என்பதுபற்றி தலைமை ஆசிரியர் திருவாளர் ஸ்ரீ நாராயண ரெட்டியார் அவர்கள் விரிவாகப் பேசினர்.

பிறகு, சக்கிராபுரம் பெண்பாடசாலை மாணவிகளால் சுகாதார சம்பாஷணையும், செஞ்சி பெண் பாடசாலை மாணவிகளால் கல்வியைப் பற்றி சம்பாஷணையும், செஞ்சி சத்திய மங்கலம் பாடசாலை மாணவி களால் கும்மி கோலாட்டமும் வெகு விமரிசையாக நடைபெற்றது. தேனீர் கச்சேரி நடைபெற்றது.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை மாணவர் சங்கம், சங்ககிரி (சேலம்)

20—2—42-ல் உதவி ஆசிரியர் ஸ்ரீ **S.** முத்துசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. பெரியார்களின் சரித்திரம் என்பது விஷயம்.

ஜம்னுலால் பஜாஜ் அவர்களின் ஜீவியத்தைப்பற்றியும் அவரது அகால மரணத்தைக் குறித்தும் வார்தாவில் பயிற்சிபெற்ற தொழி லாசிரியர் **K. M. K.** மகம்மது அவர்களால் பிரசங்கம் செய்யப்பட்டது. பிறகு அவர் மரணத்திற்கு அனுதாபம் காட்டினர்.

---

## இந்துமத பாடசாலை, வாலாஜாபாத் சுவாமி விபுலானந்தா வருகை

21—2—42-ல் பிரபுத்த பாரதாவின் ஆசிரியரும் தமிழ்ப்பேராசிரி யருமான சுவாமி விபுலானந்தா பி. எஸ். ஸி. அவர்கள் விஜயம் செய் தார். பல பிரிவுகளான நூல் நிலையம், வாசகசாலை, இசைமன்றம், மருத்துவச்சாலை முதலியவைகளைப் பார்வையிட்டனர். திருவள்ளுவர் தொழிற்சாலையில் மாணவர்கள் பன்னிரண்டுக்கு மேற்பட்ட தொழில்கள் பயில்வதைப் பார்வையிட்டார்கள். மாணவர்களின் மெய்கண்டார் கழகக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து மாணவர்களின் பேச்சுத்திறமை, பாட்டு, விவாதம் முதலியவற்றைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டினர். பாடசாலை கல்லூரியாகவேண்டுமென வாழ்த்தினர்.

### போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை, வேம்பாக்கம்

20—2—42-ல் பெற்றோர் சங்க, மாணவ சங்க விழாக்கள் நடைபெற்றன. ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. K. ராமன் மேனன் அவர்கள் தலைமை வகித்தார். சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டரும் வந்திருந்தார். சுமார் 100 பெற்றோர்கள் வந்திருந்தனர்.

தலைவர் உரையில், பெற்றோர்கள் அதிகமாக விஜயம் செய்திருப்பது அவர்களுக்குப் பாடசாலையில் உள்ள ஊக்கத்தை விளக்குகிறதென்றும், மாணவர்களை காலந்தவறாமல் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டுமென்றும், தினம் பிடி அரிசி வீதம் சேர்த்து ஏழை மாணவர்களுக்கு அன்னமளிக்க உதவவேண்டுமென்றும், ஐந்தாவது வகுப்புவரை எல்லாரும் படிக்கவேண்டுமென்றும், ஜில்லா போர்டார் உதவியில் பாடசாலை நடந்தபோதிலும் கிராமத்தினர் அவ்வப்போது ஏற்படும் குறைவை நிவர்த்தி செய்வது பெற்றோர்கள் கடமையாகும் என்றும் கூறினர்.

ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் பாடசாலைகளின் அபிவிருத்திக்கான பல விஷயங்களைப்பற்றிப் பேசினர்.

தலைமை ஆசிரியர் ஸ்ரீ V. கிருஷ்ணசாமி அய்யங்கார் வந்தனோபசாரம் கூறினர்.

---

### டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம் தஞ்சை.

7—2—42-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. வெங்கட்டராமய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. இச்சங்கத்திற்குக் கலைமகள் பத்திரிகையை வரவழைக்கவும், புத்தகாலயம் ஒன்று ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் அவர்கள் "தாய்மொழி கற்பித்தல்' என்பதுபற்றி விரிவாக சொற்பொழிவு செய்தார். காரியதரிசி ஸ்ரீ மாருதி ராவ் வந்தனம் கூறினர்.

---

### மன்னார்குடி தாலூகா, மரக்கடைபோர்டு ஸ்கூல், லக்ஷ்மகுடி போஸ்டு.

11—2—42 முதல் 16—2—42 வரை சுகாரதாரவிழா கொண்டாடப்பட்டது.

11உயும் 12உயும் தெருக்களையும் சேரிகளையும் சுத்தி செய்யும் வேலை.

13உ லக்ஷ்மகுடி ஹெல்த் ஸப் இன்ஸ்பெக்டர் தலைமையில் பந்தய விளையாட்டுகள் நடந்தன. தலைவர் பந்தய விளையாட்டின் அவசியத்தைப் பற்றிப்பேசினர்.

14உ தலைமை ஆசிரியர் ஸ்ரீ R. அனந்த ராமசாமி அய்யர் அவர்கள் தலைமையில் விழாசம்பந்தமான ஊர்வலம் நடந்தது.

15வ குழந்தைகள் நாள்—கூத்தா நல்லூர் டாக்டர் ஸ்ரீ V. S. திருஞானம், L.M.P. தலைமை வகித்தார். அப்போது மன்னார்குடி ரேஞ்சு ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. A. கோபால கிருஷ்ணய்யர் அவர்கள் சுகாதார வாரத்தைப்பற்றிப் பேசினர். ஒரு வயதிற்குட்பட்ட சுமார் 50 குழந்தைகளை பேற்றோர்கள் கொண்டுவந்திருந்தனர். நன்ருக வளர்க்கப்பட்டிருந்த 7 குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

16வ தஞ்சை ஜில்லா ஹெல்த் ஆபீஸர் ஸ்ரீ N. விஜயராகவன் அவர்கள் தலைமை வகித்தார். விழாவிற்கு சுமார் 500 ஜனங்கள் வந்திருந்தனர். 'தொத்து வியாதிகளும் தடுக்கும் முறைகளும்' என்பது பற்றி ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கோபால கிருஷ்ணய்யரும். 'சரீர சுத்தமும் பள்ளிக்கூட சுகாதாரமும்' என்பது பற்றி ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரும் பேசினர்கள். மாணவ மாணவ மாணவிகளால் 'சுகஜீவினி' என்ற நாடகம் நடத்திக் காண்பிக்கப்பட்டது. சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராமமூர்த்தி அய்யரால் பரிசுகள் வழங்கப்பட்டன.

---

### போர்டு ஆண்பாடசாலை, பெற்ருேர் சங்கம், வத்லகுண்டு.

22—2—42-ல் இச்சங்கவிழா ஸ்ரீ B. N. கிருஷ்ணய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ N. V. ராஜ கோபாலய்யர் அவர்கள் இச்சங்கத்தைத் திறந்து வைத்து வந்திருந்த பெற்ருேர்களுக்கு மனதில் நன்கு படியும்படி இச்சங்கத்தின் நோக்கத்தையும் பெற்ருேர்களின் கடமைகளையும்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். பிறகு தமிழ் பண்டிதர் வித்வான் ஸ்ரீ E. S. கோவிந்தய்யங்கார் அவர்கள் 'பெற்ருேரும் பள்ளிக்கூடமும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். மாணவர்கள் குருவையர் விளையாட்டுகளாலும், நாடகத்தாலும் வந்தவர்களை மகிழ்வித்தனர். தலைவர் முடிவுரைக்குப்பின் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது.

---

### போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல், ஆட்டையம்பட்டி. ஸ்கௌட்கேம்

28—2—42-ல் இப்பாடசாலை சாரணர்களும் ஸ்கௌட் மாஸ்டரும், தலைமை ஆசிரியரும் சேர்ந்து 12 மைல் தூரத்திலுள்ள அலவாய் மலையிலிருக்கும் சித்தர் கோவிலுக்குப்போய் அங்குள்ள விசேஷங்களைப் பார்த்து வந்தனர்.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், அதமங்கோட்டை.

14—2—42-ல் இச்சங்க ஆண்டுவிழாவானது ரிவெனியூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீ R. சுப்ரமணியன், B. A. அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல கனவான்கள் விஜயம் செய்திருந்தனர். 'பெற்றோர் கூட்டுறவு', 'செஞ்சிலுவைச் சங்கத்தின் யுத்தகால சேவைகள்' என்பனபற்றி சொற்பொழிவுகள் நடந்தன.

---

## முனிசிபல் ஆரம்ப பாடசாலை, திருமாநிலையூர், கரூர்.

1—3—42-ல் இப்பாடசாலை பெற்றோர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா தாசில்தார் ஸ்ரீ P. A. அந்தோணி அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

'சிலப்பதிகாரம்' என்பதுபற்றி ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளையும் 'தமிழ்மொழியும் தேச சரித்திரமும்' என்பதுபற்றி சங்கத்தலைவர் ஸ்ரீ A. V. சந்திரசேகரய்யர் அவர்களும் பிரசங்கம் செய்தனர்.

பாடசாலை மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம் அபிநயப் பாடல்கள் நடைபெற்றன. சங்கீதப்போட்டி, பந்தய விளையாட்டுகளும் நடந்தன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பிறகு தலைமை ஆசிரியர் ஸ்ரீ K. K. அருணாசலம் பிள்ளை பாடசாலை அபிவிருத்தியைப்பற்றியும், பெற்றோர்களின் கடமையைப்பற்றியும் பேசினார்.

குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

---

## பெற்றோர் சங்கம், காட்டுப்புத்தூர்

1—3—42-ல் இச்சங்க ஆரம்பதினக் கொண்டாட்டம் ஜமீன்தார் உயர்தர பாடசாலையில் ஸ்ரீ K. R. வெங்கட சேஷய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனேகம் பெற்றோர்களும் ஆசிரிய ஆசிரியைகளும் வந்திருந்தனர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ A. ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் 'பெற்றோர் சங்கமும், அதன் அலுவல்களும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். மாணவர்கள் 'உண்மையின் வெற்றி' என்ற நாடகத்தை நடித்துக்காட்டினர். மாணவிகள் கும்மி கோலாட்டம் நடனங்களால் சபையோர்களை மகிழ்வித்தனர். அங்கத்தினர் தேர்தலுக்குப்பிறகு தலைவர் முடிவுரையில் பெற்றோர் ஒத்துழைப்பின் அவசியத்தைப்பற்றி நீண்டதோர் பிரசங்கம் செய்தார். மாணவ மாணவிகளுக்குப் பரிசும் தின்பண்டங்களும் வழங்கப்பட்டன.

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, சுகாதார விழா எட்டரை (திருச்சி)

19—2—42 முதல் 22—2—42 முடிய இவ்வூர் பெற்றோர் சங்க ஆதரவில் இவ்விழா கொண்டாடப்பட்டது.

19௳ ஜீயபுரம் டாக்டர் ஸ்ரீ K. R. சேஷாத்ரி, L.M.P. அவர்கள் 'கிராம சுகாதாரம்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

21௳ மாணவர் சங்க வருஷாந்திரக் கொண்டாட்டம். சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ E. V. கோபாலய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருச்சி மில்ஸ் ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ K. R. சுப்ரமணியம் அவர்கள் 'பாரதியின் தூது' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

22௳ மாலை பரிசளிப்பு விழா—திருச்சி E. R. ஹை ஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ S. ராமனுதய்யர் அவர்கள் 'தற்கால யுத்த நிலைமையும் நமது கடமையும்' என்பதுபற்றி உபன்னியசித்தார். இரவில் திருச்சி ரேஞ்சு ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ V. சிவசிதம்பரம் செட்டியார் அவர்களால் கொக்கிப்புழு வியாதியைப்பற்றிய ஒளிச் சித்திரப்படம் காட்டப்பட்டது. அப்பொழுது ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ V. D. பிச்சை பிள்ளை அவர்கள் 'யுத்தமும் தற்காப்புகளும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

---

## திருவண்ணாமலை தாலூகா பஞ்சாயத்து போர்டு ஆசிரியர் யூனியன், திருவண்ணாமலை

8—3—42-ல் இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் டேனிஷ் மிஷன் உயர்தர பாடசாலையில் நடைபெற்றது. ஸ்ரீ காளியப்ப செட்டியார் தலைமை வகித்தார். அதுசமயம், மதராஸ் லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் அவர்கள் பஞ்சாயத்து ஆசிரியர்களுக்கு யுத்த அலவன்ஸ் கொடுக்கலாமென்று விடுத்துள்ள அறிக்கையின் முதல் நிபந்தனையைத் திருத்தி 'பணவசதியுள்ள எல்லா பஞ்சாயத்து போர்டுகளும் கட்டாயம் ஆசிரியர்களுக்கு யுத்த அலவன்ஸ் கொடுக்கவேண்டும்' என்று உத்தரவிடுமாறு சிபார்சு செய்யும்படி கல்வி டைரக்டர் துரை அவர்களை கேட்டுக்கொள்ளுகிறது. தலைவர் முடிவுரையில் வேலூரில் நடக்கப்போகும் 33-வது மாகாணக் கல்வி மகாநாட்டிற்கு ஆசிரியர்கள் ஏராளமாகச் சென்று கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.

---

# பத்திராதிபர் குறிப்பு

## யுத்தமும் ஆரம்பக்கல்வியும்

யுத்தத்தின் விளைவாக, சென்னையிலும், மற்றுமுள்ள கடற்கரையோரங்களிலுமுள்ள பள்ளிக்கூடங்களிலும், ஆசிரியர்களிடையே பெருங் குழப்பம் உண்டாயிருக்கிறது. யுத்த பீதியினால் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை, இவ்விடங்களிலிருந்து, அபாயம் குறைவாயிருக்கக் கூடிய இடங்களுக்கு அழைத்துச் சென்று விட்டனர். அதனால் பள்ளிக் கூடங்களுக்கு வரும் பாலர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. இது காரணம் பற்றியே சிலர், பள்ளிக்கூடங்களின் கோடை கால விடுமுறையை உடனே ஆரம்பித்து விடலாமென்று சொல்லத் தொடங்கிவிட்டார்கள். சென்னைக் கார்ப்பொரேஷனில் அம்மாதிரியான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். இவர்கள் வெளியேறாமல், தங்கும் பிள்ளைகளின் கல்வியைப்பற்றிச் சற்றும் சிந்திக்கவில்லை போலும். மேயர் ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார், இது விஷயமாகப் பேசும்பொழுது, குழந்தைகளை அபாயத்துக்குள்ளாக்கக் கூடாது என்றும் ஆகவே பள்ளிக்கூடங்களை உடனே மூடிவிட வேண்டும் என்றும் கூறினார். பள்ளிக்கூடத்தை மூடிவிட்டால், இப்பாலர்கள் அபாயத்தினின்றும் தப்பித்துக்கொள்வார்களா ? அவர்கள் பல காரணங்களைக்கொண்டு வெளியேற முடியாதவர்களாயிற்றே. ஆகவே, சென்னைக் கார்ப்பொரேஷன் தீர்மானத்தைத் துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்யாததை நாம் பாராட்டுகிறோம்.

யுத்தம் போகும் போக்கைக் கவனித்தால், இது இன்னும் பல மாதங்களுக்கு நடைபெறும் என்றே தோன்றுகிறது. எனவே இப்பொழுது பயந்து வெளியேறின பாலர்கள் திரும்பவும் தங்கள் பள்ளிக் கூடத்தில் வந்து சேர்வார்களா என்ற பிரச்னைதான் ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்கும் மிகுந்த குழப்பத்தை விளைவித்திருக்கின்றது. இந்த 3 மாத காலத்திலே, மாணவர்கள் குறைவினால், சம்பள வருமானம் குறைந்து விட்டது. மானேஜர்களில் பலருக்கு, ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது மிகக் கடினமாய் விட்டது. துரைத்தனத்தார் டிசம்பர் புள்ளி விவரத்தின்படியே மே 15௳ வரை கிராண்டு அளிப்பது

இவர்களுக்குப் பெரும் உதவியாகும். ஆயினும் மானேஜர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் மிகவும் அதிகமானதே. இது இப்படி இருக்க, புதிய வருஷத்தில், பள்ளிக்கூடங்களுக்குப் பாலர்கள் வராவிட்டால், என்ன செய்வது? ஆசிரியர்களை வேலையினின்று நீக்கி விடுவதா? இல்லாவிடில் அவர்களுக்குச் சம்பளம் எவ்வாறு கொடுக்கிறது? துரைத்தனத்தாரால் எவ்வளவு உபகாரம் அளிக்க முடியும்? பள்ளிக்கூடங்கள் திறக்கவில்லையென்றால், சென்னையில் மாத்திரம் உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலிருக்கும் சுமார் 2000 ஆசிரியர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். இவர்களின் கஷ்டத்தை எவ்வாறு நிவர்த்திக்க முடியும்? இது விஷயத்தைத் துரைத்தனத்தார் நன்கு ஆலோசித்து, தீர்மானத்துக்கு வரவேண்டும். மேமீ 15உக்குமேல், இப்பொழுது காட்டிவரும் சலுகை காட்டுவது சாத்தியமாயிருக்காது என்று அறிவித்துள்ளார்கள். ஆனால், அதினின்று மே 15உக்குமேல் அதிகப்படி ஆசிரியர்கள் இருக்கக் கூடாது என்றும், அவர்களுக்கு நோடீஸ் கொடுத்துவிட வேண்டும் என்பது, அவ்வறிக்கையின் கருத்தல்ல என்பதையும் வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது. வேறு இடங்களில் இவர்களை வேலையில் நியமிப்பது எவ்வளவு தூரம் முடியும் என்பதையும், மற்ற உத்தியோகத் துறைகளில் இங்குள்ள ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள முடியுமா என்பதையும் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். ஆசிரியர்களினிடையே ஏற்பட்டுள்ள குழப்பத்தை நீக்க மானேஜர்களும் துரைத்தனத்தார்களும் ஆழ்ந்த யோசனை செய்து சரியான முடிவுக்கு வருவது மிகவும் அவசியம்.

## நமது புதிய பிரசுரங்கள்

**பூவர்ணனை** BY N. சுப்ரஹ்மண்ய அய்யர், M.A.L.T., & K. ராமமூர்த்தி, M.A.L.T., (Dip. Geo.)

புதிய பாட திட்டத்தை ஒட்டியது.

நான்காம் வகுப்புக்குரியது .... விலை அணா 7.

ஐந்தாம் வகுப்புக்குரியது .... விலை அணா 8.

I, II, III பாரங்களுக்குரியது விலை அணா 10 ; அணா 12 ; அணா 12.

**அங்க கணிதம்** BY S. ராதாகிருஷ்ண அய்யர், B.A., & K. வைத்தியநாதஸ்வாமி அய்யர், B.A.,

அவர்களால் எழுதப்பட்டதை

புதிய பாட திட்டத்தை முழுதும் தழுவி

S. ராஜமையர், B.A.,L.T., அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

**Book I for Form I 0—10—0 ; Book II for Form II 0—12—0**
**Book III for Form III 0—12—0**

**P. வரதாச்சாரி அண்டு கம்பெனி**

நெ. 8, லிங்கி செட்டித் தெரு, சென்னை

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
முத்திரை
ரிஜிஸ்டர் நெ. 1506

# அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி,

அசோகா பாக்டரி,

கோயமுத்தூர்.

Regd. No. M. 3473

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRA

520, HIGH ROAD, TRIPLICANE.

## செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,500 |

## அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினால், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

Printed by L. Raghuraja Bharati at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S Sabhesan M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.